# 20.05.2022ம் திகதிய 50வது மாதாந்த சபைக்கூட்டம்

நேரம் : மு.ப 9.30 மணி
காலம் : 20.05.2022ம் திகதி வெள்ளிக்கிழமை
இடம் : சபா மண்டபம் தலைமை அலுவலகம்
தலைமை : கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன்

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

| | | |
|---|---|---|
| ➢திரு.பத்மநாதன் மயூரன் | - | கௌரவ தவிசாளர் |
| ➢திரு.இராஜமனோகரன் ஜெயகரன் | - | கௌரவ உபதவிசாளர் |
| ➢திருமதி.கௌசலா சிவா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கணேசு முருகையா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.இராசையா இராசலிங்கம் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.செல்வநாயகம் சிவலோஷன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.தெய்வேந்திரம் கிரிதரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.ரவிதாஸ்.கோமதி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கந்தையா குகானந்தன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.குமாரசாமி மதுசுதன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢செல்வி.குலேந்திரன் பிரிந்தா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢செல்வி.விஜயகுமார் சிந்துஜா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் | - | செயலாளர் |

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

| | | |
|---|---|---|
| ➢திருமதி.வாசுகி சுதாகர் | - | கௌரவ உறுப்பினர் |

மேற்படி கூட்டமானது மு.ப 9.30 மணியளவில் கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் மே 18ஆம் திகதி முள்ளி வாய்க்காலில் உயிர் நீத்த அனைத்து உறவுகளுக்கும் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினையும் தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 49வது மாதாந்த கூட்ட அறிக்கை (ஏப்ரல்) மற்றும் 28வது விசேட கூட்ட அறிக்கை ஆகியன அங்கீகரித்தல். குறித்த அறிக்கைகளில் திருத்தமிருந்தால் அதனைத் தெரிவிக்குமாறும் சரியாயின் அவற்றினை அங்கீகரிக்குமாறும் கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையினரிடம் கோரியதைத் தொடர்ந்து குறித்த அறிக்கைகள் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 20.052022/01**

18.04.2022ம் திகதிய 49வது சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/02**

24.03.2022ம் திகதிய 28வது விசேட கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புகள். சபையின் இணையத்தளம் Nallur. Ps.gov.lk முகவரியில் மீள உருவாக்கி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை கௌரவ உறுப்பினர்களுக்கு அறியத்தருவதுடன் நல்லூர் பிரதேசசபை எனும் பெயரில் முகநூல் மீள இயங்கு நிலையிலுள்ளது என்பதனையும் சபைக்கு அறியத்தருவதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் யூன் 01ஆம் திகதி உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேசசபைக்குட்டபட்ட வீதிகளில் மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வினை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் கௌரவ உறுப்பினர்களாகிய நீங்களும் குறித்த சுகாதார தினத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன் எமது சபையின் செயலாளர் அவர்களுக்கு 06.06.2022ஆம் திகதி முதல் வலிவடக்கு பிரதேசசபைக்கு இடமாற்ற கட்டளை கிடைக்கப்பெற்றுள்ளது. இன்னும் எமது காலம் 10 மாதங்கள் தான் இருக்கின்றது. அதற்குள் நாம் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகள் அதிகமாகவுள்ளதுடன் அவற்றுக்கான நிதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளது. எமது காலம் வரையாவது செயலாளர் அவர்களை எம்முடன் இணைந்து செயற்படுவதற்கு கோரி பிரதம செயலாளர் அவர்களுக்கு தாம் ஒரு கடிதம் எழுதவுள்ளதாகவும் அதற்கு சபை அனுமதியினை கோரிய போது அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக பிரதம செயலாளர் அவர்களுக்கு கடிதம் சமர்ப்பித்து செயலாளர் அவர்களது இடமாற்றத்தை இரத்து செய்வதற்கு சபையில் முன்மொழிந்தனர்

**தீர்மானம் 20.05.2022/03**
எமது சபைச்செயலாளர் அவாகளுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தினை சபைக்காலம் வரையாவது இடைநிறுத்தி சபையின் செயற்பாடுகளுக்கு சபையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு கோரி பிரதம செயலாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்புவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 03வது விடயம் ஏப்ரல் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை சபை அங்கீகரித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/04**
ஏப்ரல் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருவ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - சித்திரை - 2022 | | | | | |
|---|---|---|---|---|---|
| கொக்குவில் உப அலுவலகம் | | | | | |
| இல | விண்ணப்ப இல | பெயர் | முகவரி | கட்டட விபரம் | அனுமதித்த திகதி |
| 1 | K/34/2022 | தி.விஜயகுமாரி | குளப்பிட்டி லேன் | வீடு | 01.04.2022 |
| 2 | K/22/2022 | ச.குமுதினி | பிரம்படி லேன் | 2 மாடி வீடு | 01.04.2022 |
| 3 | K/256/2021 | ச.ரேகா | நீதிராசா வீதி | வீடு | 01.04.2022 |
| 4 | K/35/2022 | ச.சாருகேசி | இருபாலை வீதி | வீடு | 01.04.2022 |
| 5 | K/09/2022 | கு.உமாசுதசர்மா | முத்தட்டுமடம் 2ம் வீதி | 2 மாடி வீடு, மதில் | 01.04.2022 |
| 6 | K/132/2020 | இ.தயாபரன் | ஸ்ரேசன் வீதி | மதில் | 01.04.2022 |
| 7 | K/33/2012 | த.விசாகன் | விதானையார் லேன் | திருத்திய 2 மாடி வீடு | 08.04.2022 |
| 8 | K/184/2021 | சு.உதயன் | அம்பாள் ஒழுங்கை | வீடு | 08.04.2022 |
| 9 | K/276/2020 | சு.பிரதாயினி | இராமகிருஸ்ணா பாடசாலை லேன் | காலநீடிப்பு | 08.04.2022 |
| 10 | K/250/2021 | ஐ.கைலாயநாதன் | சபாபதி வீதி | கடை,வீடு 2மாடி | 08.04.2022 |
| 11 | K/44/2022 | சி.சிவனேஸ்வரி | K.K.S வீதி | வீடு | 22.04.2022 |
| 12 | K/15/2022 | சு.சுதானந்தன் | குளங்கரை ஒழுங்கை | வீடு | 22.04.2022 |
| 13 | K/214/2021 | த.மகேந்திரன் | K.K.S வீதி 2ம் ஒழுங்கை | கடை,மதில் 2மாடி | 22.04.2022 |
| 14 | K/06/2022 | சு.ஜெயந்தி | அரசடி வீதி கோண்டாவில் கிழக்கு | தி/வீடு | 22.04.2022 |
| 15 | K/40/2022 | லி.நளாயினி | பொற்பதி வீதி 1ம் ஒழுங்கை | 2 மாடி வீடு | 22.04.2022 |
| 16 | K/39/2022 | அ.ஜேசுதாஸ் | அடைக்கலநாயகி லேன் | வீடு | 22.04.2022 |
| 17 | K/43/2022 | மா.இந்துஜா | சிவகுரு வீதி | 2 மாடி வீடு | 22.04.2022 |
| 18 | K/248/2021 | த.பிரதீபா | காரைக்கால் வீதி | வீடு, மதில் | 22.04.2022 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | K/251/2021 | வி.சஹானா | கருவப்புலம் வீதி | 2 மாடி வீடு | 22.04.2022 |
| 20 | K/88/2021 | கே.செல்வகுமாரி | நீதிராசா 1ம் லேன் | தி/வீடு | 29.04.2022 |

| நல்லூர் உப அலுவலகம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **இல** | **விண்ணப்ப இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அனுமதித்த திகதி** |
| 1 | N/17/2022 | ஜெ.இராஜேஸ்வரி | அரசடி ஒழுங்கை | வீடு | 01.04.2022 |
| 2 | N/156/2021 | பெ.நிரோசா | கலாசாலை ஒழுங்கை | வீடு -அரச வீட்டுத்திட்டம் | 01.04.2022 |
| 3 | N/87/2021 | றொ.ரஜிதா | புதிய செம்மணி வீதி | திருத்திய 2 மாடி வீடு | 08.04.2022 |
| 4 | N/160/2021 | ப.வசந்தரூபன் | ஆடியபாதம் வீதி | 2 மாடி வீடு, மதில் | 08.04.2022 |
| 5 | N/91/2020 | வி.அபிராமி | கலாசாலை 5ம் ஒழுங்கை | திருத்திய 2 மாடி வீடு | 08.04.2022 |
| 6 | N/152/2021 | தே.ஜெயராசம் | மணிப்புரி 3ம் ஒழுங்கை | வீடு | 08.04.2022 |
| 7 | N/96/2021 | ச.பாலசுகி | தாளையடி ஒழுங்கை | COC- 3 மாடி வீடு | 08.04.2022 |
| 8 | N/25/2022 | த.சற்குணதேவி | பலாலி வீதி | வீடு | 22.04.2022 |
| 9 | N/153/2017 | ரூ.லஜிந்தினி | பலாலி யாழ் வீதி | COC- 2 மாடி வீடு | 22.04.2022 |
| 10 | N/203/2019 | சே.கேதீசன் | கெனடி ஒழுங்கை | COC திருத்திய 2 மாடி வீடு | 22.04.2022 |

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் மு.ப. 10.00 மணியளவில் கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் மு.ப. 10.00 மணியளவில் கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

நிகழ்ச்சி நிரலில் 04வது விடயம் ஏப்ரல் மாத கொடுப்பனவுகளுக்கான சபை அனுமதி. குறித்த கொடுப்பனவுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/05**
ஏப்ரல் மாத கீழ்வரும் கொடுப்பனவுகளுக்கு சபையால் தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| V.N | Date | Cash Book 162-1001-00000-920 | Details - April 2022 | Cash | XE |
|---|---|---|---|---|---|
| | 1 | செயலாளர் பிச நல்லூர் | பண்டிகை முற்பணம் | 190,000.00 | |
| | | எஸ் வி முருகேசு | ஒயில் கொள்வனவு | 431,680.00 | |
| | | வி இளங்கோ | மேலதிக நேரம் | 2,366.25 | |
| | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | எரிபொருள் | 303,672.00 | |
| | | | | **927,718.25** | |
| | 5 | ஜெயாஸ் வேக்ஸ் | வட்டாரம் 10 வீதி வேலை | 2,895,153.37 | 167,000.00 |
| | | பொற்பதி சசநி | வெளிவாரி தொழிலாளர் கொடுப்பனவு | 551,088.00 | |
| | | கைத்தொழில் அபிவிருத்திச் சபை | தொழிற்பயிற்சிக்கான முற்பணம் | 400,000.00 | |
| | | எஸ்ரிஎஸ் சிவில் இஞ்னியரிங் | பொது நூலகம் ஆயர்வேதம் திருத்தம் | 360,874.44 | 40,097.16 |
| | | எஸ்ரிஎஸ் சிவில் இஞ்சினியரிங் | வாராந்த சந்தை சசநிலையமாக மாற்றம் | 901,069.40 | 47,424.71 |
| | | நேசன் பில்டேஸ் | மக்கள் பாவனை கருமபீடம்அமைத்தமை | 692,382.32 | 36,441.18 |
| | | | | **5,800,567.53** | **290,963.05** |
| | | | | **927,718.25** | |
| | | | | **6,728,285.78** | **290,963.05** |
| | 8 | மாபிள் சிவில் இஞ்சினியரிங | கொக்குவில் சந்தை கடை தொகுதி | 2,080,183.48 | 202,726.21 |
| | | | | **2,080,183.48** | **202,726.21** |
| | | | | **6,728,285.78** | **290,963.05** |
| | | | | **8,808,469.26** | **493,689.26** |
| | 22 | சந்திரா பாதுகாப்பு சேவை | பாதுகாப்பு கொடுப்பனவு | 180,905.00 | |
| | | | | **180,905.00** | |
| | | | | **8,808,469.26** | **493,689.26** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 8,989,374.26 | 493,689.26 |
| | 25 | ஸ்ரார் அட்வெடிசிங் | பிரதிபலிப்பு ஸ்ரிக்கர் | 18,370.00 | |
| | | ஸ்ரார் அட்வெடிசிங் | சிவப்பு ஸ்ரிக்கர் | 62,400.00 | |
| | | ஸ்ரார் அட்வெடிசிங் | மகளிர் தினத்திற்கான பனர் | 3,280.00 | |
| | | ஸ்ரார் அட்வெடிசிங் | நன்றி ஸ்ரிக்கர் | 6,300.00 | |
| | | | | 90,350.00 | |
| | | | | 8,989,374.26 | 493,689.26 |
| | | | | 9,079,724.26 | 493,689.26 |
| | 26 | ஜே செசிகுமார் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் | 51,446.00 | |
| | | வி சாந்தினி மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் | 18,499.46 | |
| | | ரி கஜன் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் பயணக் கொடுப்பனவு | 29,766.10 | |
| | | கோள்டன் ஈகிள் | சாரதி சேவை | 88,725.00 | |
| | | புதிய உதயன் | விளம்பரம் | 5,520.00 | |
| | | ஜெயாஸ் வேக்ஸ் | வட்டாரம் 11 வீதி வேலை | 4,929.62 | 259.46 |
| | | கேபி இஞ்சினியரிங் | பிணை முறி மீளளிப்பு | 451,227.29 | |
| | | | | 650,113.47 | 259.46 |
| | | | | 9,079,724.26 | 493,689.26 |
| | | | | 9,729,837.73 | 493,948.72 |
| | 27 | எஸ் வி முருகேசு | ஒயில் கொள்வனவு | 179,805.00 | |
| | | | | 179,805.00 | |
| | | | | 9,729,837.73 | 493,948.72 |
| | | | | 9,909,642.73 | 493,948.72 |
| | 29 | நேசன் பில்டேஸ் | வட்டாரம் 9 வீதி வேலை | 84,763.25 | 4,405.69 |
| | | நேசன் பில்டேஸ் | வட்டாரம் 8 வீதி வேலை | 105,457.75 | 5,550.41 |
| | | நேசன் கென்ஸ்ரக்சன் | வட்டாரம் 12 வீதி வேலை | 838,065.63 | 44,047.03 |
| | | கேபிஎஸ்இஞ்சினியரிங் சொலுசன் | பிடிபணம் | 89,030.52 | |
| | | தாரணி சிவில் இஞ்சினியரிங் | பிடிபணம் | 99,162.05 | |
| | | கே ஜெயபிரசாந் | வாகன வாடகை | 125,000.00 | |
| | | ஏ செந்தூர் செல்வன் | ஆதன தரகு | 20,456.79 | |
| | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | சுத்திகரிப்பு பொருட்கள் | 138,750.00 | |
| | | எஸ் அகல்ராஜ் | மின் விசிறி திருத்தம் | 2,000.00 | |
| | | எஸ் அகல்ராஜ் | மின் விசிறி திருத்தம் | 4,500.00 | |
| | | கூட்டுறவுச் சபை அச்சகம் | பற்றுச்சிட்டை புத்தகம் அச்சிட்டமை | 655,000.00 | |
| | | அறோட் | கதிரைகள் பின்னியமை | 15,950.00 | |
| | | தரண் ரேடேஸ் | ரக்ரர் திருத்த பாகங்கள் கொள்வனவு | 50,000.00 | |
| | | ஜெயாஸ் வேக்ஸ் | வட்டாரம் 10 வீதி வேலை | 220,210.60 | |
| | | பொப்புலர் மோட்டார் | ரயர் கொள்வனவு | 355,500.00 | |
| | | ஓட்டோ சப்ளையர்ஸ் | ரக்ரர் திருத்த பாகங்கள் கொள்வனவு | 276,000.00 | |
| | | குணபாலா வெல்டிங் வேக்ஸ் | ரக்ரர் திருத்தம் | 44,350.00 | |
| | | கே பாலசுப்பிரமணியம் | வாகன சுத்திகரிப்பு | 25,400.00 | |
| | | செயலாளர் பிச வலிகாமம் தெற்கு | இடர் கடன் - சுரேக்கா | 208,000.00 | |
| | | ஆணையாளர் மாநகரசபை | இடர் கடன் - நிசாந்தினி | 73,600.00 | |
| | | ஆணையாளர் மாநகரசபை | இடர் கடன் - கஜநிதி | 103,600.00 | |
| | | ஆணையாளர் மாநகரசபை | இடர் கடன் - பிறேமகௌரி | 41,500.00 | |
| | | பொதுக் கணக்குகள் குழு | கணக்கறிக்கை செயற்.போட்டிக் கட்டண | 10,000.00 | |
| | | பி விசாகன் | பத்திரிகை | 18,950.00 | |
| | | ஆர் கே எலக்ரிக்கல்ஸ் | வயரிங் பொருட்கள் | 18,170.00 | |
| | | தபால் மா அதிபர் | தபால் கட்டணம் | 26,099.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 4,725.00 | |
| | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 2,700.00 | |
| | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 2,240.00 | |
| | | வலம்புரி | விளம்பரம் | 3,750.00 | |
| | | வலம்புரி | விளம்பரம் | 2,620.00 | |
| | | கே சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 1,600.00 | |
| | | கே சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 2,600.00 | |
| | | எஸ் நடேசு | மயானக் கொடுப்பனவு | 600.00 | |
| | | எஸ் நடேசு | மயானக் கொடுப்பனவு | 400.00 | |
| | | செயலாளர் பிச நல்லூர் | தொலைத்தொடர்பு கோபுரம் | | 30,020.00 |
| | | இலங்கை புகையிரதத்திணைக்களம் | புகையிரத ஆணைச்சீட்டு | 3,400.00 | |
| | | நளின் இன்போமேசன் | கணனி திருத்தம் | 4,050.00 | |
| | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | மின் பொருட்கள் கொள்வனவு | 2,500.00 | |
| | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 15,562.30 | |
| | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 203,000.00 | |
| | | குணபாலா வெல்டிங் வேக்ஸ் | வாகன திருத்தம் | 146,500.00 | |
| | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | எரிபொருள் | 465,691.25 | |
| | | நேசன் பில்டேஸ் | வட்டாம் 6 வீதி வேலை | 1,472,075.17 | 77056.58 |
| | | நேசன் கென்ஸ்ரக்சன் | வட்டாரம 3 வீதி வேலை | 937,206.60 | |
| | | | | **6,920,735.91** | **161,079.71** |
| | | | | **9,909,642.73** | **493,948.72** |
| | | | | **16,830,378.64** | **655,028.43** |

| Cash Book 1095945 -April 2022 | | | | |
|---|---|---|---|---|
| V.No | Date | Details | Cash | XE |
| SA/1 | 7 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 5,180,762.66 | |
| | | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 240,169.10 | |
| | | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 28,700.00 | |
| | | செலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | | ஆளுநரின் செயலாளர் வடமாகாணம் | 1,250.00 | |
| | | ஆணையாளர் மாநகரசபை | 17091.52 | |
| | | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 5,606.00 | |
| | | செயலாளர் வலி வடக்கு பிச | 4,902.56 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 540,426.06 | 3,125.00 |
| | | | **6,022,645.90** | **3,125.00** |
| SA/2 | 8 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 670,784.00 | |
| | | ஓய்வூதிய திணைக்களம் | 28,341.00 | |
| | | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 2,350.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | | 375.00 |
| | | | **701,475.00** | **375.00** |
| | | | **6,022,645.90** | **3,125.00** |
| | | | **6,724,120.90** | **3,500.00** |
| SA/3 | 29 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 148,640.00 | |
| | | முகாமையாளர், கொமர்சியல் வங்கி திருநெல்வேலி | 97,750.00 | |
| | | முகாமையாளர், ஹற்றன் நசனல் வங்கி திருநெல்வேலி | 14,780.00 | |
| | | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி | 13,750.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முகாமையாளர், மக்கள் வங்கி திருநெல்வேலி | 14,000.00 | |
| | | நலன்புரிச் சங்கம் பிரதேச சபை நல்லூர் | 4,230.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 14,850.00 | |
| | | பொருளாளர் ஐக்கிய தேசியக் கட்சி | 1,000.00 | |
| | | இலங்கை தமிழரசுக் கட்சி | 4,000.00 | |
| | | தமிழ் தேசிய மக்கள் முன்னணி | 2,000.00 | |
| | | | 315,000.00 | - |
| | | | 6,724,120.90 | 3,500.00 |
| | | | 7,039,120.90 | 3,500.00 |

| Cash Book 6954633 -April 2022 | | | | | |
|---|---|---|---|---|---|
| V.No | Date | Details | | Cash | XE |
| EN/01 | 8 | கே நேசகுமார் | கழிவகற்றல் கலி பவுசர் | 48,000.00 | |
| | | | | 48,000.00 | - |
| EN/02 | 22 | ஆணையாளர் மாநகரசபை | ரோக்கன் | 90,000.00 | |
| EN/03 | | ஆணையாளர் மாநகரசபை | ரோக்கன் | 75,000.00 | |
| EN/04 | | செயலாளர் வலி வடக்கு பி.சபை | கலிபவுசர் | 63,500.00 | |
| | | | | 228,500.00 | - |
| | | | | 48,000.00 | - |
| | | | | 276,500.00 | - |

நிகழ்ச்சி நிரலில் 05வது விடயம் ஏப்ரல் மாத வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/06**
ஏப்ரல் மாத வருமான செலவு அறிக்கையினை சபையால் அங்கீகரிப்பதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் மு.ப.10.02 மணியளவில் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

நிகழ்ச்சி நிரலில் 06வது விடயமாகிய ஏனையவையில் உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் வழங்குதல் மற்றும் இடமாற்றத்தில் வருகை தந்துள்ள உத்தியோகத்தர்களின் இடர்கடன் சீர்செய்தல் தொடர்பான விபரம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/07**
யூன் மாதம் கீழ்வரும் உத்தியோகத்தருக்கு இடர்கடன் வழங்க சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- **இடர்கடன் வழங்கல் (யூன்)**
  - திருமதி.ர.ஜோதி – 250,000.00

**தீர்மானம் 20.05.2022/08**
இடமாற்றத்தில் வருகை தந்த கீழ்வரும் உத்தியோகத்தர்களின் இடர்கடன் சீர்செய்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இடமாற்றத்தில் வருகை தந்த உத்தியோகத்தர்களின் இடர்கடன் சீர்செய்தல்

- திருமதி.J.மதுகா - 216,320.00 (மாநகரசபை, யாழ்ப்பாணம்)
- திருமதி.J.கௌதமி - 160,000.00 (மாநகரசபை, யாழ்ப்பாணம்)

கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் மு.ப.10.05 மணியளவில் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து ஊரடங்கு காலத்தில் திருநெல்வேலிச்சந்தை திறக்கப்படவில்லை எனவும் குறித்த காலத்தில் 03.04.2022, 28.04.2022, 06.05.2022, 10.05.2022, 11.02.2022 ஆகிய 05 நாட்கள் சந்தை இயங்காமைக்கான விலைக்கழிவினை குத்தகைதாரர் கோரியுள்ளார். குறித்த சந்தை இயங்காத நாட்களுக்கு விலைக்கழிவு வழங்குவதற்கு சபையிடம் கௌரவ தவிசாளர் அவர்களினால் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/09**

நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு காரணமாக திருநெல்வேலி சந்தையின் வியாபார நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு கீழ்வரும் பட்டியலுக்கமைவாக 03.04.2022, 28.04.2022, 06.05.2022, 10.05.2022, 11.05.2022 ஆகிய 05 நாட்கள் இயங்காமைக்கான சந்தைக்குத்தகைத் தொகை ரூபா 507417.39 ஐ கௌரவ ஆளுநர் அனுமதி பெற்று விலக்கழிப்பு செய்வதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌவர உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| திருநெல்வேலிச்சந்தையின் மாதாந்த குத்தகை | இயங்காத காலப்பகுதி | இயங்காத நாட்கள் | கழிவுகோரும் தொகை |
|---|---|---|---|
| 3,104,593.00 | 03/04/2022 | 01 நாட்கள் | 103,486.44 |
| | 28/04/2022 | 01 நாட்கள் | 103,486.44 |
| | 06/05/2022 | 01 நாட்கள் | 100,148.17 |
| | 10/05/2022-12/05/2022 | 02 நாட்கள் | 200,296.34 |
| **மொத்தம்** | | | **507,417.39** |

ஏனைய விடயத்தில் அடுத்து LDSP திட்டத்திற்கு தனியான வங்கிக்கணக்கினை பயன்படுத்துமாறு பிரதித்திட்டப்பணிப்பாளர் அவர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதற்கமைவாக இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் நடைமுறைக் கணக்கினை ஆரம்பிப்பதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/10**

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம் (LDSP) இன் ஊடாக மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களிற்காக தனியான வங்கிக் கணக்கினை ஆரம்பிக்கப்பட வேண்டும் என பிரதித்திட்டப்பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம் (LDSP) அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் நடைமுறைக் கணக்கினை ஆரம்பிப்பதற்கு கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிக்கப்பட்ட பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏனைய படிக் கொடுப்பனவு வழங்குவதற்கான சுற்றுநிருபம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைவாக தயாரிக்கப்பட்ட உபமானிய வரவுசெலவுத்திட்டத்திற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/11**

2022ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிக்கப்பட்ட பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏனைய படிக் கொடுப்பனவு வழங்குவதற்கான சுற்றுநிருபம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைவாக தயாரிக்கப்பட்ட கீழ்வரும் உபமானிய வரவுசெலவுத்திட்டத்தை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| தொகை | வருமானத் தலைப்பு | வருமானத் தலைப்பு விபரம் | செலவினத் தலைப்பு | செலவின விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 6,256,808.00 | 1.71 | நிர்வாக மீளளிப்பு (சம்பள மீளளிப்பு) | 101(5) | ஏனைய விசேட படி | 1,504,434.00 |
| | 2.71 | நிர்வாக மீளளிப்பு (சம்பள மீளளிப்பு) | 201(5) | ஏனைய விசேட படி | 2,325,000.00 |
| | 3.71 | நிர்வாக மீளளிப்பு (சம்பள மீளளிப்பு) | 301(5) | ஏனைய விசேட படி | 1,702,500.00 |
| | 4.71 | நிர்வாக மீளளிப்பு (சம்பள மீளளிப்பு) | 401(5) | ஏனைய விசேட படி | 157,500.00 |
| | 5.71 | நிர்வாக மீளளிப்பு (சம்பள மீளளிப்பு) | 501(5) | ஏனைய விசேட படி | 185,000.00 |
| | 6.71 | நிர்வாக மீளளிப்பு (சம்பள மீளளிப்பு) | 601(5) | ஏனைய விசேட படி | 382,374.00 |
| **6256808.00** | | | | | **6256808.00** |

ஏனைய விடயத்தில் அடுத்து கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை 08.02.2022 – 18.02.2022ஆம் திகதி வரை பொதுச்சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக கொள்கல பாவனை நிறுத்தப்பட்டு வியாபாரம் நடைபெறாமையால் குறித்த காலப்பகுதிக்கு குத்தகை பணத்தை விலக்கழிப்பற்கு குத்தகைதாரர் கோரியுள்ளார். குறித்த கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை இயங்காத 07 நாட்களுக்கு விலைக்கழிவு வழங்குவதற்கு கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/12**

எமது கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை குத்தகைதாரரின் கோரிக்கைக்கு அமைவாக கடந்த 07.02.2022 முதல் 15.02.2022ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் வேலை நிறுத்தம் காரணமாக கொள்கலப் பாவனை நிறுத்தப்பட்டு வியாபாரம் நடைபெறாமையினைக் கருத்தில் கொண்டு குறித்த 07 நாட்களுக்கான குத்தகைப்பணம் ரூபா **21064.82** ஐ கௌரவ ஆளுநர் அனுமதி பெற்று விலக்கழிப்பு செய்வதென கௌரவ உறுப்பினர் திருவ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌவர உறுப்பினர் திரு.க.திருஞானராசா வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடைக்கான மாதாந்த குத்தகை | இயங்காத காலப்பகுதி | இயங்காத நாட்கள் | கழிவு கோரும் தொகை |
|---|---|---|---|
| 84259.25 | 08.02.2022 – 10.02.2022 வரை | 03 நாட்கள் | 9027.78 |
| | 11.02.2022 (வெள்ளிக்கிழமை) | - | - |
| | 12.02.2022 – 18.02.2022 வரை | 04 நாட்கள் | 12037.04 |
| **மொத்தம்** | | **07 நாட்கள்** | **21064.82** |

ஏனைய விடயத்தில் அடுத்து 2022ஆம் ஆண்டு பாதீட்டில் வாகனக் கொள்வனவிற்காக 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வருடமும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சனை காரணமாக குறித்த வாகனம் கொள்வனவு செய்ய சாத்தியப்பாடுகள் அமையாது. எனவே அவ் நிதியை வகைமாற்றம் செய்து வேறு அபிவிருத்திகள் மேற்கொள்வதற்கு சபை அனுமதி வழங்குமாறும், அதற்கான வேலைத்திட்டம் இன்னும் ஆராயப்படவில்லை உறுப்பினர்கள் சகிதம் பொருத்தமான வேலைத்திட்டத்தை தெரிவு செய்து குறித்த 7 மில்லியன் ரூபாவினையும் வேலை செய்வதற்கு சபை அனுமதி. அதற்கான வேலைத்தெரிவினை அடுத்த சபைக்கூட்டத்தில் ஆராய்வதற்கு ஏதுவாக உறுப்பினர்களிடம் கோருவது தங்கள் வட்டாரத்தில் ஏதாவது முக்கிய வேலைத்திட்டம் இருந்தால் அவற்றை வழங்குமாறு கோரியதுடன் கிடைக்கபெறும் வேலைத்திடங்களை கலந்தாலோசித்து முன்னுரிமைப்படுத்தி அடுத்த சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கலாம் எனத் தெரிவித்தார். அதனை சபையினர் ஏற்றுக்கொண்டனர்.

ஏனைய விடயத்தில் அடுத்து கொக்குவில் உப அலுவலக கட்டடத்தை இடித்து அகற்றுவதற்கான தொழில்நுட்பக்குழு அமைத்தல். குறித்த குழு அமைத்தல் தொடர்பாக கட்டடங்கள் திணைக்களத்தால் NP/23/01/01/01-007 11 இலக்க 2022.04.26 ஆம் திகதி அனுப்பப்பட்ட சுற்றறிக்கை சபையில் கௌரவ தவிசாளர் அவர்களினால் வாசிக்கப்பட்டு குறித்த தொழில்நுட்பக்குழுவின் தலைவராக பிரதம பொறியியலாளர் எந்திரி.ப.திவாகரன் அவர்களை நியமித்துள்ளனர். அதற்கமைவாக குறித்த குழுவின்

மேற்பார்வையின் கீழ் குறித்த கட்டடத்தை இடித்து அகற்ற வேண்டும் எனவும் தெரிவித்து அக்குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் எனவும் சபை உறுப்பினர்களில் இருவரும் ஏனைய துறைசார் வல்லுநர்களையும் நியமிக்க வேண்டும் எனத் தெரிவித்து சபை உறுப்பினர்கள் இருவர்களை நியமிப்பதுடன் குறித்த குழுவிற்கான அனுமதியினைக் கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/13**

கொக்குவில் உப அலுவலகத்திற்கான புதிய கட்டடம் அமைத்தல் வேலையினை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஏற்கனவேயுள்ள பழைய கட்டடத்தினை இடித்து அகற்றுவதற்கான தொழில்நுட்பக்குழுவில் கீழ்வரும் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதை கௌரவ சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | பெயர் | குழுவின் பதவி | பதவி நிலை | முகவரி |
|---|---|---|---|---|
| 01. | திரு.ப.திவாகரன் | தலைவர் | பிரதம பொறியியலாளர் | பிரதம எந்திரி அலுவலகம், கட்டட. திணை |
| 02. | திரு.ப.கண்ணதாசன் | உறுப்பினர் | கணக்காளர் | சாவகச்சேரி நகரசபை |
| 03. | திரு.ச.பாலரூபன் | உறுப்பினர் | செயலாளர் | வலி.மேற்கு பிரதேசசபை |
| 04. | திரு.சு.விஜயகுமாரன் | உறுப்பினர் | கௌரவ சபை உறுப்பினர் | நல்லூர் பிரதேசசபை |
| 05. | திரு.தெ.கிரிதரன் | உறுப்பினர் | கௌரவ சபை உறுப்பினர் | நல்லூர் பிரதேசசபை |

ஏனைய விடயத்தில் அடுத்து திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள இல 63ஆம் இலக்க கடை ஒப்பந்தமானது அரசடி. நல்லூர் எனும் முகவரியிலுள்ள துசிந்ததாஸ் எனும் பெயரில் கடை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது தமது மனைவியின் பெயரில் மாற்றம் செய்து தருமாறு கோரிக்கை சமர்ப்பித்துள்ளார் எனத்தெரிவித்து கோரிக்கையினை சபைக்கு தெரிவித்து குறித்த பெயர் மாற்றத்திற்கான சபை அனுமதியினைக் கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/14**

திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள இல 63ஆம் இலக்க கடையின் ஒப்பந்தத்தில் உள்ள திரு.செ.துசிந்ததாஸ் பெயரினை அவரது மனைவியான திருமதி.நளினிஜா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது சபையில் வெளிவாரி அடிப்படையிலுள்ள சாரதி சேவைக்கான ஒப்பந்த காலம் 2022.07.04 ஆம் திகதியுடன் முடிவடைவதால் குறித்த சேவைக்கான கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/15**

சபையில் வெளிவாரி அடிப்படையிலுள்ள சாரதி சேவையின் ஒப்பந்த காலம் 2022.07.04 ஆம் திகதியுடன் முடிவடைவதால் குறித்த சேவைக்கான கேள்வியினைக் கோருவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள சபைக்கடைகளில் சிறி கண்ணன் களஞ்சியக் கடை சுவர்களுக்கான வர்ணம் பூசுவதற்கு கடையின் வாடகைதாரரால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து கோரிக்கை கடிதம் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/16**

திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள சபைக்கடைகளில் சிறி கண்ணன் களஞ்சியக் கடை சுவர்களுக்கான வர்ணம் பூசுவதற்கு சபையால் தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கொக்குவில் கோழி இறைச்சிக்கடை அரக்கு முத்திரை (Seal) வைக்கப்பட்டுள்ளமையால் குறித்த கடைக்கான மீள் கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/17**

கொக்குவில் கோழி இறைச்சிக்கடைக்கு அரக்கு முத்திரை (Seal) வைக்கப்பட்டுள்ளமையால் குறித்த கடைக்கான மீள் கேள்வி கோருவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து ஊழியர்களுக்கு 2022ஆம் ஆண்டுக்கான சீருடைக்கொடுப்பனவு வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/18**

எமது சபையின் சீருடை உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களுக்கு 2022ஆம் ஆண்டுக்கான சீருடைக்கொடுப்பனவு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து வாழ்வாதார உதவி வழங்குதல். குறித்த உதவி வழங்குதல் தொடர்பாக கௌரவ தவிசாளர் அவர்களினால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார விலையேற்றம் காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. வாழ்வாதார உதவி வழங்குவதற்கான 10 துவிச்சக்கர வண்டிகள் தேவையானது எனவும் அவற்றில் பழைய விலையில் கொள்வனவு செய்யப்பட்டவை 08. விலையேற்றம் காரணமாக 02 கொள்வனவு செய்யப்படவில்லை. தையல் இயந்திரம் 19 தேவையாகவுள்ளது. அத்துடன் தையல் உபகரணம் 01 தேவை. விலையேற்றம் காரணமாகவும் தட்டுப்பாடு காரணமாகவும் விநியோகத்தரால் குறித்த தையல் இயந்திரங்கள் மற்றும் தையல் உபகரணம் ஆகியவற்றை வழங்க முடியாதுள்ளதாக அறிவித்துள்ளனர். வாழ்வாதார உதவி வழங்களில் 83 ஆடுகள் தேவையாகவுள்ளன. அவற்றில் கால்நடை வைத்தியரால் பரிசோதிக்கப்பட்டவை 14. பரிசீலிக்கப்படவுள்ளவை 29. அடையாளம் காணப்பட வேண்டியவை 28. அத்துடன் பன்னிரண்டு பயணாளிகளால் ஆடு வேண்டாம் எனத் தெரிவித்து மாற்றுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. விசேட தேவையுடையோருக்கான உதவி வழங்களில் மூன்று சில்லு சைக்கிள் மற்றும் செவிப்புலன் கருவிக்கான பற்றரி ஆகியன கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் மாற்றுக் கோரிக்கை சமர்ப்பித்தவர்கள் மற்றும் கிடைக்கப்பெறாத உபகரணங்கள் தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் வட்டார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த பயனாணிகள் பெயர் விபரம் பெற்று வேறு மாற்றுத் தேவை என்ன என்பதை தெரிந்து வழங்க முன்வருமாறு கேட்டுக்கொண்டார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர்களுக்கு தெரிந்த கடைகளில் தையல் இயந்திரங்கள் இருப்பின் அதனை தெரிவிக்குமாறும் அத்துடன் 12 பயணாளிகள் ஆடு வேண்டாம் எனத்தெரிவித்துள்ளனர். எனவே கௌரவ உறுப்பினர்கள் கௌரவ தவிசாளருடன் இணைந்து மாற்று வழியினை மேற்கொண்டால் குறித்த வேலையினை ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம் எனத் தெரிவித்தார். குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு stand கூடிய தையல் இயந்திரம் தான் ரூபா நாற்பதாயிரத்திற்கு எம்மால் வழங்க தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய விலையேற்றம் காரணமாக குறித்த விலைக்கு பெறமுடியாதுள்ளது எனவும் stand இல்லாது மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரத்தின் விலையினையும் அறிந்து அத்துடன் மாற்று தேவை கோரிய பயணாளிகளுக்கு தேவையானவற்றினையும் அறிந்து அடுத்த கூட்டத்தில் முடிவேடுப்போம் என கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா அவர்கள் மு.ப.10.20 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

ஏனைய விடயத்தில் எமது கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் சுகயீனம் காரணமாக இன்றைய கூட்டத்திற்கு வருகை தர முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத் தந்துள்ளார். அவரது லீவுக்கான அனுமதியினை சபையிடம் கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/19**
எமது கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் சுகயீனம் காரணமாக இன்றைய (20.05.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத் தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து புலமைப்பரிசில் நன்கொடை, பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர் நன்கொடை, சனசமூக நிலைய நன்கொடை, வாழ்வாதார உதவி, விசேட தேவையுடையோருக்கான உதவி ஆகியவற்றை ஒரே நாளில் நிகழ்வாக மேற்கொள்வதற்கும், குறித்த தினத்தில் நீண்ட காலமாக எமது சபைக்கீதம் உருவாக்கிய கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு மேற்கொள்ளப்படாதுள்ளது. அதனையும் அன்றைய தினமே மேற்கொள்வதுடன் தையல் பயிற்சி வகுப்பிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் செய்ய வேண்டியுள்ளது. பயிற்சியாளர் தமது உற்பத்தி பொருட்களை கண்காட்சிப்படுத்த கோரியுள்ளனர். எனவே குறித்த கண்காட்சியன்றே நாம் மேற்கூறப்பட்ட விடயங்களை உள்வாங்கி ஒரே நாளில் குறித்த நிகழ்வினை மேற்கொள்ள சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/20**
எமது சபையால் இவ்வருடம் தையல் பயிற்சி வழங்கப்பட்டவர்களின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சி நடைபெறும் தினத்திலேயே புலமைப்பரிசில் நன்கொடை, பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர் நன்கொடை, சனசமூக நிலைய நன்கொடை, வாழ்வாதார உதவி, விசேட தேவையுடையோருக்கான உதவி மற்றும் சபைக்கீதம் உருவாக்கிய கலைஞர் கௌரவிப்பு ஆகியவற்றை ஒரே நிகழ்வாக மேற்கொள்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து தவிசாளர் பாவனைக்கான வாகனம் வாடகைக்கு கடைகொள்ளல் முறையில் அமைத்துதலுக்கு சபை அனுமதி. ஏற்கனவே பாவனையிலிருந்த வாகனத்திற்கான 6 மாத ஒப்பந்தம் பூர்த்தியடைந்துள்ளது. தற்போதைய எரிபொருள் விலையேற்றம் காரணமாக தம்மால் தொடர்ந்தும் வழங்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளமைக்கு அமைவாக மீள கடைகொள்ளல் முறையில் (Shopping) கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/21**
எமது சபைத் தவிசாளர் பாவனைக்காக ஏற்கனவே வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனம் தொடர்பாக 6 மாத கால ஒப்பந்தம் பூர்த்தியாகிய நிலையில் தற்போதைய எரிபொருள் விலையேற்றம் காரணமாக குறித்த ஒப்பந்த காலத்தை நீடிக்க ஒப்பந்த கேள்வியில் சித்தி பெற்றவர் மறுத்துள்ள காரணத்தால் மீள குறித்த வாடகை வாகனத்திற்கான கேள்வியினை கடைகொள்ளல் முறையில் (Shopping) கோருவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து இரத்து செய்யப்பட்ட கொக்குவில் மீன்சந்தை புனரமைப்பு, திருநெல்வேலி சந்தி அழகுபடுத்தல், அரியாலை வடிகால் புனரமைப்பு, வீதிப்பெயர்ப்பலகை ஆகிய வேலைகளுக்கான ஒப்பந்தங்களை மீள் கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/22**
சபையால் இரத்துச் செய்யப்பட்ட கீழ்வரும் ஒப்பந்தங்களுக்கு மீள்கேள்வி கோருவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கொக்குவில் மீன்சந்தை புனரமைப்பு
- திருநெல்வேலி சந்தி அழகுபடுத்தல்
- அரியாலை வடிகால் புனரமைப்பு
- வீதிப்பெயர்ப்பலகை

கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் மு.ப.10.37 மணியளவில் சபைக்கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

ஏனைய விடயத்தில் அடுத்து 05ஆம் வட்டரத்திலுள்ள பிடாரியம்மன் வீதியின் முன்வீதி அகலம் குறைவாக இருப்பதால் அதனை அகலிப்பதற்கும் அத்துடன் மேற்படி வீதியிலுள்ள பாடசாலையருகில் நீர் தேங்கி நிற்பதனாலும் குறித்த வீதியை உயர்த்தி செப்பனிட வேண்டியுள்ளது. குறித்த வேலைக்கான மேலதிக நிதி ரூபா 306156.26 தேவையாகவுள்ளது. குறித்த மேலதிக வேலையினை மேற்கொள்வதற்கும் அதற்கான கொடுப்பனவினை குறித்த ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கும் சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/23**

வட்டார வீதிகள் புனரமைப்பின் போது 05ஆம் வட்டரத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட நான்கு வீதிகளில் பிடாரியம்மன் வீதியின் முன்வீதியில் வடிகால் அமைக்கப்பட்டு வீதியின் அகலம் குறைவடைந்துள்ளது. மேற்படி வீதியில் தற்போது வாகனங்கள் சீராக செல்வதற்கு ஏதுவாக வீதியை சற்று அகலிக்க வேண்டி இருப்பதால் அதனை அகலிப்பதற்கும் அத்துடன் மேற்படி வீதியிலுள்ள பாடசாலையருகில் நீர் தேங்கி நிற்பதனைத் தவிர்ப்பதற்காகவும் குறித்த வீதியை உயர்த்தி செப்பனிட வேண்டியுள்ளது. குறித்த மேலதிக வேலையினை மேற்கொள்வதற்கும் அதற்கான கொடுப்பனவு ரூபா 101,394.32 வழங்குவதற்கும் சபை தழுவு அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து பின்வரும் கொடுப்பனவுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/24**

Part of Head Office Building as Public Service Center with covid – 19 protection கொடுப்பனவு ரூபா 143,293.68 ஐ Nation Builbers ற்கு வழங்க சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/25**

Renovation of ward base Roads ( ward – 02) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 2,344,399.90 ஐ nation Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/26**

Improvement Facilities of unused Weekly market Building to use as Community Center Builbing வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 461,274.92 ஐ S.T.S Civil Engineering ற்கு வழங்குவதற்கு சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/27**

Construction of Disable in Public Librares of Ayuveda Despencercies, Kokuvil & Kondavil, Improverment to Separate Unite on the Special needs People at Kokuvil Library வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா 448,240.07 ஐ S.T.S Civil Engineering ற்கு வழங்குவதற்கு சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/28**

Macadam Road (ward- 05) வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா 306,156.26 வை Nation Builbers ற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள்

முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து LDSP வேலைத்திட்டத்தின் கீழான PT ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளும் வேலைகளுக்கான தொழில்நுட்பக்குழு, பெறுகைக்குழு, ஆகியனவற்றை அமைப்பதற்கான சபையின் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 20.05.2022/29**

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் (LDSP) கீழான PT ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளும் வேலைகளுக்கான தொழில்நுட்பக்குழு, பெறுகைக்குழு, ஆகியனவற்றை அமைக்க வேண்டியுள்ளதால் பின்வரும் குழுக்களை அமைத்து அவற்றில் கீழ்வரும் உத்தியோகத்தர்கள் அங்கம் வகிப்பதை சபை அங்கீகரித்து தழுவுஅனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தொழில்நுட்பக்குழு**

- திரு.S. இரகுநாதன் - பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி
- திரு. ச. தயாளன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர், நல்லூர் பிரதேசசபை
- திருமதி.க.அபிராமி - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

**பெறுகைக்குழு**

| | |
|---|---|
| 01. திரு. ப. மயூரன் | - கௌரவ தவிசாளர் |
| 02. திரு.சு. விஜயகுமாரன் | கௌரவ உறுப்பினர் |
| 03. திரு.க. திருஞானராஜா | - கௌரவ உறுப்பினர் |
| 04. திரு.கு. மதுசுதன் | - கௌரவ உறுப்பினர் |
| 05. செல்வி.கு. பிரிந்தா | - கௌரவ உறுப்பினர் |
| 06. திரு.சு. சுதர்ஜன் | - செயலாளர் |

ஏனைய விடயத்தில் அடுத்து பாதீட்டில் வாகன எரிபொருளுக்கு எதிர்பார்த்து ஒதுக்கப்பட்ட நிதி தற்போதைய விலையேற்றம் காரணமாக ஆகஸ்டிற்கு பின்னர் முடிவடையும் நிலை காணப்படுகின்றது. அதற்கு பின்னர் நாம் ஏதாவது மாற்றீடுகளை தான் ஆலோசிக்க வேண்டும். அது தொடர்பாக தங்களின் ஆலோசனையினை வருகின்ற சபைக்கூட்டத்தில் வழங்குமாறு சபையிடம் கேட்டுக்கொண்டார். அதன்போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ தவிசாளர் அவர்கள் குறிப்பிட்ட விடயம் நாம் 2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் வாகன எரிபொருளுக்கென எதிர்பார்த்து ஒதுக்கிய நிதி வரும் ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் குறித்த பாதீட்டில் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கிய நிதியும் தற்போதைய விலையேற்றம் காரணமாக பற்றாக்குறையாக தான் இருக்கும். தற்போது 1ஆம் கட்டத்திற்கான வேலைகளுக்கான கேள்விகோரி திறக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சில வேளைகளில் அதில் கோரியவர்கள் எமது மதிப்பீட்டுத்தொகையிலும் பார்க்க 10%, 15% கூடுதலான தொகைக்கு விண்ணப்பித்திருக்கக்கூடும். 2ஆம் கட்ட வேலை கோரும் போது இதைவிட விலை அதிகரித்தும் காணப்படலாம். அவசியமற்ற வேறு வேலைகள் இருப்பின் அவற்றை குறைத்து மட்டுப்படுத்தி செய்வது தொடர்பாக ஆலோசனை வழங்குமாறே கௌரவ தவிசாளர் அவர்கள் கோருகின்றார் எனத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் அனைவருக்கு வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு கௌரவ தவிசாளர் அவர்கள் வெளிநாடு சென்றதாக தாம் அறிய முடிகின்றது. அங்கிருந்து எமது பிரதேசசபைக்கான அபிவிருத்தி தொடர்பாக ஏதாவது ஆலோசனை இருந்தால் அவற்றை எமக்கு தெரியப்படுத்தினால் உதவியாக இருக்கும் என கௌரவ தவிசாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் தாம் பிரான்ஸ் நாட்டில் 21 முதல்வர்களை சந்தித்துள்ளதாகவும் அவர்களிடம் தாமம் யாழ். மாநகரசபை முதல்வரும் கோரியதற்கு அமைவாக அவர்கள் சில வாக்குறுதிகள் தந்துள்ளதாகவும் அதில் 9 முதல்வர்கள் ஒப்பந்தம் செய்துள்ளதுடன்

பொருட்களை எமக்கு நேரடியாகத் தரமுடியாதமையால் ஏதாவது பொது அமைப்புக்களின் மூலமாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். அத்துடன் எமது சபை உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். அதில் 10 நபர்களை தெரிவு செய்து அவர்களை தாங்களே பொறுப்பெடுத்து 10 – 15 நாட்களுக்கு பயிற்சி வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளனர். அதற்கான தொடர் நடவடிக்கையினைத் தாம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் நோர்வே நாட்டிற்குச் சென்றிருந்த போது எமது கழிவுப் பொருட்களை எடுத்து எரியூட்டுவதன் மூலம் சுடு நீராகவும் எரிவாயுவாகவும் எடுப்பதற்கான இயந்திரம் அவர்களிடம் இருப்பதாகவும் அதன் விலை 147 மில்லியன் யுறோக்கள். அதனை எம்மால் பெறுவது சாத்தியமற்ற ஒன்று. வடமாகாண சபைக்கு இலவசமாக வழங்குவதாகவும் அத்துடன் சோலர் திட்டமானது நோர்வே பல்கலைக்கழகமும் எமது பல்கலைக்கழகமும் ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் மூலம் மிதக்கும் சோலர் திட்டம் எமக்கு செங்குந்தா குளத்திலும், யாழ்.மாநகரசபைக்கு புல்லுக்குளத்திலும் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த இரு சோலரும் 10ஆம் மாதத்திற்கு வரவுள்ளது. அத்துடன் பத்தாயிரம் கழிவகற்றல் பெட்டிகள் தம்மால் கோரப்பட்டுள்ளதாகவும் முதல் கட்டமாக 2000 பெட்டிகள் தந்துதவுவதாக தெரிவித்துள்ளனர். அவை விரைவில் இங்கு வந்தடையவவுள்ளது. அத்துடன் வாகனங்களும் தம்மால் கோரப்பட்ட போது அவை தொடர்பான வாக்குறுதிகளும் தந்துள்ளனர். சில முதல்வர்கள் எம்முடன் ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளனர். அதன் பிரதிகளும் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சில தனியார் அமைப்புக்களிடம் அபிவிருத்தி வேலைகளுக்கான உதவிகளை கோரியிருந்தோம். அவர்கள் Proposal வழங்கினால் அதற்கான நிதிகளை தாம் வழங்குவதாக குறிப்பிட்டுள்ளனர். அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே சென்ற விடயம் மிக ஆரோக்கியமான சந்திப்புகளாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் எமது கௌரவ தவிசாளர் வெளிநாட்டிற்குச் சென்று வந்தமை எமக்கு மட்டுமன்றி யாழ்.குடா நாட்டிற்கே பெருமை தேடித் தந்துள்ளதாகவும் குறித்த பயணத்தினூடாக எமது பகுதி மக்களுக்கு கிடைக்க இருக்கின்ற மக்கள் நலன் சார் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தொடர்ச்சியான பொருளாதார ரீதியான தூரநோக்கு செயல்திட்டங்களை மேற்கொண்ட எமது தவிசாளர் அவர்களுக்கு மக்கள் சார்பாகவும் கௌரவ உறுப்பினர் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்துரைக்கையில் 50வது கூட்டத்தில் கலந்து கொள்வதுடன், அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு எமது தவிசாளர் அவர்களின் பயணமானது எமது பிரதேசத்திற்கு கிடைத்த வரப்பிரசாதம் எனவும், அவர் கூறியுள்ள அபிவிருத்திகள் மக்கள் நலப்பணிகள் ஏனைய சபைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதுடன் அதற்கான தமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் விலையேற்றம் காரணமாக அன்றாட கூலித்தொழிலாளர் வாழ்வாதாரப் பாதிப்பு தொடர்பாக நாம் கூறத்தேவையில்லை. மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் பிரதேசசபை நிதியில் மட்டும் தங்கியிருக்காது பிற பொது அமைப்புக்கள் கொடையாளர்கள் பங்களிப்பில் அநேகமான வேலைத்திட்டங்களைச் செய்ய முடியும். நாம் பிரதேசசபையின் நிதியைப் பயன்படுத்தியிருக்கின்றோம். கொடையாளர் நிதியைப் பயன்படுத்துவது குறைவு. அந்தவகையில் கௌரவ தவிசாளர் அவர்கள் சபை நிதிக்கு அப்பால் தமது செயற்றிட்டங்கள் மேற்கொண்டது மகிழ்ச்சி. அத்தோடு ஒவ்வொரு குடிமகனுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தல் தொடர்பாக கிராமசேவையாளர்கள், பிரதேசசெயலகங்கள் மற்றும் விவசாய திணைக்களம் ஆகியன இவை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வினை செய்து வருகின்றன. ஆனால் ஊக்குவிப்பு செய்வது குறைவு. நாம் மக்கள் பிரதிநிதிகள். சபை சார்ந்து இப்பொருளாதார பின்னடைவிற்கு எவ்வாறான தீர்வை பெற்றுக்கொடுக்க போகின்றோம் என்ற கேள்விக்கு எம்மால் வாழ்வாதாரம் மட்டுமே மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இது தொடர்பாக பாண் விலையேற்றம் காரணமாக மாற்றீடாக முன்னைய காலங்களில் பயன்படுத்தியதைப் போல் மரவள்ளியை நாடலாம். இவ்வாறு நாம் விவசாயத்திலே ஈடுபடுகின்றவர்களை தெரிவு செய்து அவர்களுக்கான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளை சபை மூலம் வழங்குவது தொடர்பாக தாம் செயலாளர் அவர்களுடன் உரையாடிய போது செயலாளர் அவர்களினால் சபை மூலம் மரநடுகைக்காக நிதி ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக்கூறியிருந்தார். மரநடுகைத்திட்டம் காலம் காலமாக பல அமைப்புக்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது எனவும் தமது ஆலோசனையாக எமது நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட இயற்கை விவசாயத்தில் அதிக ஆர்வமுள்ளவர்களை தெரிவுசெய்து அவர்களுக்கான காய்கறி விதைகள் அல்லது நாற்றுக்களை சபையால் வழங்குவதுடன் கௌரவ தவிசாளர்

கூறிய வாழைக்குற்றிகள் தூளாக்கும் இயந்திரம் மூலமாக அவற்றைப் பசளையாக்கி விவசாயத்தில் ஆர்வமுடையவர்களுக்கு மானிய அடிப்படையில் பசளைகளையும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் அவற்றுக்கான வழிகாட்டுதல்களை கமநலசேவைகள் திணைக்களம் நேரடியாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர் அவர்களும் எம்முடன் இணைந்து பயணிப்பார்கள் என்றும் இவ்வாறு அவற்றை வழங்கி அதன் அடுத்த கட்டமாக கண்காணிப்பதை எமது வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் உறுப்பினர்களாகிய நாமும் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவிகளையோ ஊக்குவிப்புக்களையோ மேற்கொள்ளலாம் என்பது தமது கருத்தாகும். இதுவே தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்கு சபையால் மேற்கொள்ளும் சிறிய உதவியாக இருக்கும் எனத் தெரிவித்து அதற்காக நாற்றுகள் மற்றும் தாணியங்களையும் சபையால் வழங்குமாறும் அவற்றுக்கான பசளைகளை மானிய அடிப்படையில் வழங்குமாறு தாம் இச்சபையில் கோரிக்கை முன்வைப்பதாகத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர் அவர்களது நல்ல கோரிக்கை. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையில் போதிய வருமானம் இல்லாமையால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு பின்வாங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இயற்கை வழி வேளாண்மை (organic Farm) அமைப்புக்கள் மூலம் நாற்றுகள் மற்றும் விதைகளைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் அத்துடன் எமது சபையூடாக மானிய அடிப்படையில் பசளைகளை வழங்குவோம். அதனை நாம் பத்திரிகை மூலமாக ஆர்வமுள்ள விவசாயிகள் பிரதேசசபையுடன் தொடர்பு கொண்டால் விதைகள், தானியங்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவற்றுக்கான பசளைகளை மானிய அடிப்படையில் வழங்குவதாக அறிவித்தல் வழங்குவோம். முதற்கட்டமாக பசளைகளை வழங்குவோம் நாற்றுக்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததுடன் குறித்த விடயத்தை உறுப்பினர்கள் தங்கள் முகநூலினூடாகவும் (facebook) பகிருமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் கௌரவ உறுப்பினர் தெரிவித்த விடயம் நல்ல விடயம். இதனை வரவேற்று அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இதனை பகீரங்கப்படுத்தி துரிதமாகச் நடைமுறைப்படுத்துமாறும் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ தவிசாளர் அவர்களது வெளிநாட்டுப்பயணமானது எமது சபைக்கான ஆரோக்கியமானது. வேறு சபைகளைப் பொறுத்த வரையில் உறுப்பினர்களோ தவிசாளர்களோ வெளிநாடு சென்று வந்தால் தமது சபைக்குரிய விடயங்களை செய்து வந்தமையினை தாம் அறியவில்லை எனவும் தற்போது யாழ்.மாநகர சபை முதல்வர், எமது தவிசாளர் ஆகியோர் வெளிநாடு சென்று பிரதேசசபைக்குரிய தூர நோக்குடன் பல அபிவிருத்திகளை மேற்கொள்ள ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளமை பாராட்டத்தக்கது எனவும் அத்துடன் கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கூறியது போல நாம் வாழ்வாதாரம் வழங்கி வருகின்றோம். நாம் இப்படியான விடயங்களுக்கு முன்னரிமை வழங்குவது நன்று. அந்தவகையில் குறுகிய கால உழுந்து, பயறு, சாமை, குரக்கன் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கினால் பயனாளிகள் பயன்பெறுவர். அதன் மூலமாக எமது பிரதேசசபை கட்டியெழுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் கூறியது போல கூடுதலான தவிசாளர்களின் வெளிநாட்டுப் பயணம் அலுவலக கடவுச்சீட்டை பயன்படுத்தி தமது தனிப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதாகவே உள்ளது. ஆனால் எமது தவிசாளர் சென்று வந்தமை ஒரு சிறப்பான வரவேற்கத்தக்கதொன்று. தவிசாளர் வெளிநாடு சென்ற காலப்பகுதியில் சில விடயங்கள் மந்த கதியில் இயங்கின. அவற்றை வட்டார ரீதியான அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி துரிதமாக திண்மக்கழிவகற்றல் மற்றும் ஏனைய விடயங்களில் கூடுதல் கரிசினை காட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் எமது சபைச்செயலாளர் அவர்களும் மாற்றலாகி செல்லக்கூடிய நிலையுள்ளது. ஆளுமைமிக்க செயலாளர் எமது காலத்தில் சபைக்கு நிறைவான வேலைகளை திறம்பட ஆற்றிவருகின்றார். அவரது ஆற்றல் திறமை என்பன எமது நல்லூர் பிரதேசசபைக்கு கிடைத்தவரப்பிரசாதம். அவரது மாற்றல் தொடர்பாக தவிசாளருடன் கதைத்து நிறுத்துவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். உத்தியோகத்தர்களின் 5 வருடத்திற்கு பின்னராக இடமாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அந்தவகையில் தொடர்ச்சியாக வருபவர்களோடு எமது பயணம் தொடர்ந்து மக்கள் நலன் சார்ந்த விடயங்களை செயற்படுத்துவோம் என நம்புவதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் கருத்துரைக்கையில் தவிசாளரின் வெளிநாட்டுப் பயணமானது எமது சபைக்கு ஆரோக்கியமாக அமைந்ததாக கூறியிருக்கின்றார். அதனை வாழ்த்தி வரவேற்று இவ்விடயங்களில் முன்நோக்கி சபை நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு இது துணையாகவும் மக்களின் அபிவிருத்திக்கு ஒரு படிக்கல்லாகவும் அமைந்துள்ளது. வெளிநாட்டு பயணத்தால் சபைக்கு கிடைக்கக்கூடிய ஒழுங்குபடுத்தலில் சில விடயங்களை தவிசாளர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோன்று மக்களின் தற்போதைய பொருளாதாரத்தை நிவர்த்தி செய்யக்கூடிய விடயமாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும் எமது சபையினால் மக்களை மீட்கக் முடியுமோ எமது மக்களின் உற்பத்திகளை பெருக்கி அவர்களது உற்பத்தி திறனை மேம்படுத்த சபையிலான முயற்சிகளுக்கு கௌரவ உறுப்பினர் சி.கௌசலா அவர்கள் கொண்டு வந்த தீர்மானமும் சிறப்பானது. அது வழிகாட்டுதலில் சபை உறுப்பினர், உத்தியோகர்ாகளும் இணைந்து இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி முன்னுதாரணமான சபையாக திகழ்வதற்கு ஒன்றிணைந்து செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் கருத்துரைக்கையில் 50வது கூட்டத்தில் பெரு மகிழ்ச்சி அடையும் வார்த்தைகள் இங்கு பேசப்பட்டுள்ளது. உண்மையில் வினைத்திறனாக எமது தவிசாளர் அவர்கள் இயங்கியுள்ளார். எல்லோரையும் போல சுற்றுலாச் செல்லாது பல இடங்களுக்குச் சென்று பல அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி துள்ளியமான வேலைகளை செய்துள்ளார். அவருக்கு எமது சபை சார்பாக வாழ்த்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் எமது செயலாளர் செயற்றிறம் மிக்க ஒருவர். அவர் சில விடயங்களை செய்யும் போது யார் எவர் என்ற பாகுபாடுகளின்றிய உண்மைத்தன்மையுடன் எமக்கு எவ்வளவோ வேலைத்திட்டங்களை செய்து தந்திருக்கின்றார். செயலாளர் அவர்களிடம் கூறினால் கூட அவர் தவிசாளருடன் கலந்து கூட்டாக செயற்பட்டுள்ளதை தாம் அறிந்துள்ளதாகவும் அவரை நாம் இவ்விடத்திலிருந்து இழக்க முடியாது. ஆகவே எல்லோரும் சேர்ந்து அவர் தொடர்ந்து எம்முடன் பயணிக்க பாரிய நடவடிக்கையினை எடுக்குமாறும் கோரி மீண்டும் கௌரவ தவிசாளர் அவர்களை வாழ்த்தி அமர்ந்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ தவிசாளர் அவர்கள் மிகக்குறுகிய காலத்தில் வெளிநாட்டிற்குச் சென்று தன்னை அர்ப்பணித்து பிரதேசசபைக்கு அவர் ஆற்றிய சேவைகளை பாராட்ட வேண்டும். இளைஞனாக இருந்தாலும் மிகப் பொறுப்பாக மக்களுக்கு மிக விரைவான சேவைகளை வழங்கி வருகின்றார். அதனை இன்று காலையிலும் காணக்கூடியதாக இருந்தது. அவருக்கு ஒத்துழைப்பாக செயலாளர் அவர்களும் எல்லா விடயங்களிலும் மிகச் சிறப்பாக எமது சபையினை நடாத்தி வருவதுடன் பொதுச் சேவைக்காக செயற்பட்டு வருகின்றார். 50வது கூட்டத்தொடரில் நல்ல விடயத்தை முன்வைத்தார்கள். அதனையிட்டு மகிழ்வடைவதாகவும் அதேபோன்று கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கூறியது போல ஒவ்வொருவருக்கும் இரு மரக்கறிக்கன்றுகள் வழங்கினால் கூட அவர்களுக்கு பயன்படும். இந்த நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களினால் நன்றிகள் தெரிவிக்கப்பட்டு கூட்டமானது மு.ப.11.10 மணியளவில் நிறைவடைந்தது

செயலாளர்.